**செ. கு. எண்: 127** **நாள்: 09.09.2016**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை – 9.9.2016

திண்டுக்கல் மாவட்டம், பழனி வட்டம், பாலசமுத்திரம் கிராமம், பாலாறு மெயின் ரோடு, மாட்டு மந்தை, நத்தம் சர்வே எண் 38-ல் உள்ள குடியிருப்பு பகுதியில் 7.9.2016 அன்று பிற்பகல் ஏற்பட்ட தீ விபத்தில் திரு ஆறுமுகம் என்பவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

இந்த தீ விபத்தில் அகால மரணமடைந்த திரு ஆறுமுகம் அவர்களின் குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த தீ விபத்தில் உயிரிழந்த திரு ஆறுமுகம் அவர்களின் குடும்பத்திற்கு மாநில பேரிடர் நிவாரண நிதியிலிருந்து நான்கு லட்சம், முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து ஒரு லட்சம் என மொத்தம் 5 லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு: – இயக்குநர்**, செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.